தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 228/ந/2022
நாள். 12.01.2023

திருமதி. I.குழந்தையம்மாள்,
பரமக்குடி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
பரமக்குடி நகராட்சி. – எதிர் மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, காமராஜர் நகர், Y 16–A, 12/338 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. I.குழந்தையம்மாள் என்பவரின் 07.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.10.2022 அன்று பெறப்பட்டு 228/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, காமராஜர் நகர், Y 16–A, 12/338, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. I.குழந்தையம்மாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"பரமக்குடி நகராட்சி பொது வருவாய் நிதியில் கடந்த 17.02.2021 அன்று நடைபெற்ற டெண்டரில் இரயில்வே பீடர் சாலை மேற்கு 1வது தெருவில் தார்சாலை அமைக்கும் பணி ரூ.10/– இலட்சம், 2வது குறுக்குத் தெருவில் தார்சாலை அமைக்கும் பணி ரூ.10/– இலட்சம், காமாட்சி நகரில் தார்சாலை ரூ.10/– இலட்சம் மற்றும் காமாட்சி அம்மன் நகரில் 3வது குறுக்குத் தெரு ரூ.10/– இலட்சம் ஆக மொத்தம் 4 பணிகளையும் டெண்டர் எடுத்து வேலை செய்து முடித்து 18 மாதமாகி விட்டது. மேற்கண்ட 4 வேலைகளுக்கும் பில் பட்டியல் 30.07.2021 எழுதி முடிக்கப்பட்டுள்ளது. வேலை முடித்து பில் எழுதி 15 மாதங்களாகியும் இன்று வரை எனக்கு மேற்கண்ட பணிக்கான பில் தொகையை வழங்க நகராட்சியால் மறுக்கப்படுகிறது. பில்தொகை கேட்கும் போதெல்லாம் சம்பளம் போடவே பணம் இல்லை என்ற ஒரே காரணத்தையே திரும்ப திரும்ப சொல்லப்படுகிறது.

எனவே 16 மாதமாக வழங்கப்படாமல் உள்ள ரூ.40/– இலட்சத்தை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் பரமக்குடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

பரமக்குடி நகராட்சி ஆணையாளர் தனது 04.01.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"புகார் மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்கிற ஒப்பந்ததாரருக்கு இந்நகராட்சி வருவாய் நிதி 2020–21–ன் கீழ் செய்து முடித்த ரூ 40.00 இலட்சம் மதிப்பீட்டிலான நான்கு பணிகளுக்குரிய பட்டியல் தொகை 09.12.2022 அன்றோடு முழுவதும் வழங்கப்பட்டுவிட்டது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் பரமக்குடி நகராட்சி ஆணையரும் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகுமாறு 21.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் உடல் நலக்குறைவின் காரணமாக கலந்து கொள்ள இயலாததால் அவரது ஒப்புதலின்படி அவர் சார்பாக அவரது மகன் திரு.I.வின்செண்ட் ராஜா என்பவர் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"பரமக்குடி நகராட்சி பொது வருவாய் நிதியில் கடந்த 17.02.2021 அன்று நடைபெற்ற டெண்டரில் இரயில்வே பீடர் சாலை மேற்கு 1–வது தெருவில் தார் சாலை அமைக்கும் பணி போன்று 4 பணிகளை ஒப்பந்தம் செய்து முடித்து 18 மாதங்களாகி விட்டது. மேற்கண்ட 4 வேலைகளுக்கும் பில் பட்டியல் 30.07.2021 எழுதி முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்று வரை எனக்கு சேரவேண்டிய 40 இலட்சம் ரூபாயை இன்னும் எனக்கு நகராட்சியால் அளிக்கப்படவில்லை. மேற்கண்ட தொகையை வழங்குமாறு கோரியபோது நகராட்சியில் சொத்து வரி வசூல் இல்லாததால், நிதி நிலைமை சரி இல்லாத காரணத்தால் நிலுவைத் தொகை வழங்க இயலவில்லை என கூறி வருகின்றனர். இது தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு புகார் அனுப்பியும் எவ்வித பயனும் இல்லை.

மேலும் மேற்கண்ட நகராட்சியில் ரூ. 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரையிலான பல்வேறு பணிகளுக்கு பொது நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோராமல் ரகசியமாக டெண்டர் நடத்தி உள்ளார்கள். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக எனக்கு தெரியப்படுத்தவும் இல்லை. எனவே, ரகசியமாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறித்து விசாரித்திடவும், 15 மாத காலமாக எனக்கு வழங்கப்படாமல் உள்ள ரூ.40 இலட்சத்தை உடனடியாக நகராட்சியால் வழங்கிடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை வேண்டிக் கொள்கிறேன். புகாரில் தெரிவித்த தொகை ரூ 40 இலட்சத்தை 28.11.2022, 12.12.2022 ஆகிய தேதிகளில் வழங்கி விட்டார்கள்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான பரமக்குடி நகராட்சி ஆணையர் சார்பாக பரமக்குடி நகராட்சியில் இளநிலைப் பொறியாளராக பணிபுரியும் திரு. A.P.சுரேஷ்பாபு மற்றும் கணக்கராகப் பணிபுரியும் திருமதி. K.ஜெயசுதா ஆகியோர் 05.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:–

"பரமக்குடியில் ஒப்பந்தப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்பவருக்கு சேரவேண்டிய தொகை ரூபாய் 40 இலட்சம் மேற்கண்ட

ஒப்பந்ததாரருக்கு 9.12.2022 அன்று முழுவதுமாக வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் பரமக்குடி நகராட்சியில் ரகசியமாக நடத்தப்படாமல் அறிவிப்புப் பலகை வாயிலாக தெரியப்படுத்தி டெண்டர் கோரப்படுகின்றன என்கின்ற விவரத்தையும் இனி வரும் காலங்களில் மனுதாரர் போன்ற ஒப்பந்ததாரர்களுக்கு தபால் மூலமாகவும் இணைய வசதிகளின் மூலமாகவும் தெரியப்படுத்தப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரர் சார்பாக ஆஜரான அவரது மகனுடைய வாக்குமூலம், பரமக்குடி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, பரமக்குடி நகராட்சியின் இளநிலைப் பொறியாளர் மற்றும் கணக்கர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

பரமக்குடியை சார்ந்த மனுதாரர் திருமதி.I.குழந்தையம்மாள் என்பவர் தனது 07.10.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில், ஒப்பந்தப்புள்ளி மூலம் பரமக்குடி நகராட்சி ஆணையாளரால் 17.02.2021 நாளிட்ட 3 பணி ஆணைகள் மற்றும் 14.06.2021 நாளிட்ட 1 பணி ஆணை என மொத்தம் 4 பணி ஆணைகளின்படி, பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 4 சாலைகளில் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலைகளை தலா ரூ 10/– இலட்சம் வீதம் மொத்தம் ரூ 40/– இலட்சம் மதிப்பீட்டில் அமைத்து, பணிகள் முடிவுற்ற பின்னரும், கடந்த 16 மாத காலமாக 4 பணிகளுக்கான பட்டியல் தொகையான ரூ 40/– இலட்சம் பரமக்குடி நகராட்சியால் ஒப்பளிப்பு செய்யப்படாமல் உள்ளதாக புகாராக தெரிவித்துள்ளார்.

நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.35, நாள் 10.03.2000–ல் நகராட்சிகளில் பணிமதிப்பீடு செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளில் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு வழிகாட்டும் வகையில் ''பொறியாளர் கையேடு'' வெளியிடப்பட்டது. இக்கையேட்டில் அத்தியாயம் – IV ல் பத்தி 4.3.9–ல் நகராட்சியில் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மூலம் பெற்ற பணியினை செய்து முடித்தவுடன் உரிய அதிகாரி அப்பணியினை ஆய்வு செய்து சரிபார்த்து பணிமுடிக்கப்பட்ட சான்றினை வழங்கியபின், ஒப்பந்ததாரருக்கு இறுதி பட்டியலை தயாரித்து உரிய தொகை ஒப்பளிப்பு அளிக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Chapter IV, Para 4.3.9 (INSPECTION AND TEST-CHECK)

Municipal works shall be test-checked by concerned Regional Executive Engineer in order to ensure that the work is done generally in accordance with plans and estimates and to satisfy himself about the quality of work. He may also do some check-measurement while making the test check. Final bill shall be passed for payment only after the works are test checked and after issuing of completion certificate by the Competent authority. Where the works are carried out under the control of Municipal Engineer (First grade), Regional Executive Engineer need not do the test check.

இவ்வாறு பொறியாளர் கையேட்டில் வெளியிடப்பட்டுள்ள பத்தி 4.3.9–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, ஒப்பந்ததாரர் பணிமுடித்தவுடன் பணிக்கான பட்டியல் தொகையினை வழங்காமல் சுமார் 17 மாதங்கள் கடந்து ஒப்பளிப்பு செய்துள்ள செயலானது நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் கணக்கரின் பொறுப்பற்ற தன்மையையும், மெத்தனப்போக்கையும் காட்டுகிறது. இவ்வாறு கடமை தவறி பணியாற்றிய பரமக்குடி நகராட்சி

ஆணையர், நகராட்சி பொறியாளர், நகராட்சி கணக்கர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள்மீது உரிய விதிகளின் கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

நகராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்பணிகள் முடிக்கப்பட்டவுடன் பணிகள் முடிக்கப்பட்ட சான்றினை வழங்கியதை உறுதி செய்தவுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு செய்து முடிக்கப்பட்ட பணிக்கான பட்டியல் தொகையினை எவ்வித காலதாமதமின்றியும் மற்றும் எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காத வகையில் உடனுக்குடன் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும் என்கிற சுற்றறிக்கையினை அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சி ஆணையாளர்களுக்கும் அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

05.01.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் சார்பாக கலந்து கொண்ட அவரது மகன் திரு.I.வின்செண்ட் ராஜா என்பவர் அளித்த வாக்குமூலத்தில் பரமக்குடி நகராட்சியில் இரகசியமாக ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள புகார் குறித்து இம்முறைமன்ற நடுவத்தால் தனியே முறையீட்டு மனு எண்.230/ந/2022–ல் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இப்பொருள் குறித்த ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.I.குழந்தையம்மாள்,
Y 16–A, 12/338, காமராஜர் நகர்,
பரமக்குடி – 623 707, இராமநாதபுரம் மாவட்டம்,

2) ஆணையாளர், பரமக்குடி நகராட்சி,
பரமக்குடி – 623 707, இராமநாதபுரம் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/1/23

செயலாளருக்காக

13/01/23